# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302

## ஞானஸ்நானம்

**முன்னுரை :**

இந்தப் பாடத்தின் மூலமாக விசுவாசிகளின் ஞானஸ்நானத்தின் தன்மையையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துக்கூற விரும்புகின்றோம். இந்தப் பாடமானது நாம் ஏற்கனவே 6, 7, 8 பாடங்களில் படித்த பரிசுத்த ஆவியின் ஸ்நானம் அல்ல. இந்தப் பாடம் தண்ணீர் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை குறித்தும், ஞானஸ்நானம் கொடுக்கப்படும் விதத்தைக் குறித்தும் விளக்குகிறது. அதோடு, இந்த ஞானஸ்நானத்தோடு சம்பந்தப்பட்ட தவறான உபதேசங்களை எடுத்துக்காட்டுவதும் ஒரு நோக்கமாகும். அதே சமயம் இயேசுகிறிஸ்து கொடுத்த இந்த தெளிவான கட்டளையைக் குறித்து பெரும்பாலான விசுவாசிகளுக்கு இதன் தீர்க்கமான முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதே நமது நோக்கமாகும். ஞானஸ்நானத்தைக் குறித்ததான அவசிய மில்லாத சிறிய காரியங்களை ஆராயாமல், அத்தியாவசியமான எல்லா போதனைகளும் இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

இயேசுகிறிஸ்து தமது ஊழியத்தை துவங்கும்போது தன்னைத்தான் தண்ணீர் ஞானஸ்நானத்துக்கு கீழ்ப்படுத்தினார். தம்முடைய ஊழியத்தை முடிக்கும்பொழுதும் அவருடைய சீஷர்களுக்கு தமது கட்டளையாக சகல ஜாதிகளையும் சீஷராக்கி.. ஞானஸ்நானம் கொடுக்கவும் கட்டளையிட்டார். ஆகையினால் ஞானஸ்நனாத்தைக் குறித்து வேதம் கூறும் முக்கியத்துவத்தை விட்டு யாரும் தப்பிப்போக இயலாது. ஞானஸ்நானத்தைப் பொறுத்தவரையில் அதைத் தள்ளவோ அல்லது ஒதுக்கவோ கூடாது. அது நமது விருப்பத்தின்படி செய்கிற ஒன்றல்ல. அது ஆண்டவருடைய கட்டளை. ஆகவே இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதுமட்டுமல்ல, அதைக் குறித்ததான தெளிவான முழுமையான அர்த்தத்தையும், மதிப்பையும் உணர்ந்து முறைப்படி ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளவேண்டும். மேலும் இந்த முக்கியமான போதனையைக் குறித்து தவறான அபிப்பிராயங்கள் உள்ளன. பல கிறிஸ்தவ சபைகள் ஞானஸ்நானத்தைக் குறித்து வேதத்திற்கு முரண்பாடான கருத்துக்களை உடையவை களாக இருக்கின்றன. இதன் பலனாக ஏராளமான கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தின் மூலமாகத் தாங்கள் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் என்று எண்ணுகிறார்கள். இது ஒரு வீணான நம்பிக்கை. ஜெபத்தோடும் உண்மையோடும் நாம் இந்தப்பாடத்தை படிப்போமானால் வேதாகமத்தில் கூறியுள்ள ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தையும் நோக்கத்தையும் தேவன்தாமே நமக்கு விளங்கச்செய்வார்.

**பாடம்**

## I. ஞானஸ்நானம் என்ற வார்த்தையின் அர்த்தம் :

1. 'ஞானஸ்நானம்' என்கிற ஆங்கில பதத்திற்கு கிரேக்க பெயர்ச்சொல் 'பாப்டிஸ்மா' (Baptisma) நீரில் மூழ்கு (Immersion) நீரில் அமிழ்த்து (Submersion) என்று அர்த்தம்கொள்ளும். அது 'பாப்டிஸ்சோ' (Baptizo) என்ற கிரேக்க வினைச்சொல்லிலிருந்து வந்துள்ளது. இந்த வினைச்சொல் நீரில் மூழ்கு (to dip), நீரில் அமிழ்த்து (Submerge) அல்லது மூழ்கடி (immerse) என்ற கருத்துள்ளது. இந்த வார்த்தை (துணிக்கு சாயம் தோய்த்தல் அல்லது ஒரு பாத்திரத்தை தண்ணீரில் மூழ்கச்செய்து தண்ணீர் எடுத்தல் என்ற கருத்தில்) புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.
2. அதே வேளையில் எந்த ஒரு பாப்திஸ்து போதகரும் கிரேக்க மொழியில் அகராதியை எழுதவில்லை. லிடில் (Liddell) மற்றும் ஸ்காட் (Scott) போன்றவர்கள் எழுதிய கிரேக்க அகராதியில் 'பாப்டிஸ்சோ' (Baptizo) என்ற பதத்திற்கு ஒரே மாதிரியான அர்த்தத்தை (நீரில் மூழ்கு) பயன்படுத்தியுள்ளனர். இந்த வினைச்சொல்லுக்கு ஊற்று அல்லது தெளி என்ற அர்த்தம் கொடுக்கப்படவில்லை.
3. டாக்டர் எ.டி. ராபர்ட்சன் எழுதியுள்ள சர்வதேச கலைக்களஞ்சியத்தில் 'பாப்டிஸ்சோ' என்ற வார்த்தை ஒன்றே கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைக் குறிக்கும் சரியான பதம் என்று குறிப்பிட்டுள்ளார்.
4. கிரேக்க மொழியானது ஆரம்ப முதல் தொடர்ந்துவருகிறது. இன்று கிரேக்க, ரஷ்ய நாடுகளிலும் மற்றும் எங்கெல்லாம் கிரேக்க சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதோ அங்கெல்லாம் ஞானஸ்நானம் என்ற வார்த்தைக்கு (பாப்டிஸ்சோ) மூழ்குதல் என்பதே உலகவழக்கமாக உள்ளது. லூக்கா, பவுல் போன்ற புதிய ஏற்பாட்டு கிரேக்கர்கள்

அங்கிகாிக்கவில்லை என்பதற்கு எவ்வித சான்றும் இல்லை. (அத்தாட்சி: இ.எ.சோபோசல் எழுதிய ரோம பைசான்டைன் காலத்து கிரேக்க அகராதி–பக்கம் 297).

5. தையர் என்பவரின் அகராதியில் 'பாப்டிஸ்சோ' என்ற வார்த்தையின் அர்த்தம் தண்ணீரில் மூழ்குதல் என்பது, அதாவது ஏற்கனவே பாவம் மன்னிக்கப்பட்டவர் கள் தண்ணீரில் மூழ்கி அதைத் தெரிவிக்கும் செயலாகக் கூறப்பட்டுள்ளது.
6. இங்கிலாந்து சபையை சேர்ந்த ஆல்பர்ட் பிளம்மர் எழுதிய மத்தேயு வியாக்கியானத்தில் (பக்கம் 28) யோவான் ஸ்நானகரின் முக்கிய பணி தண்ணீரில் மூழ்குவதினால் வெளிப்படுத்தப்படும் புதிய வாழ்க்கையில் ஜனங்களைக் கட்டுவதே ஆகும்.
7. ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இறையியல் நிபுணரான அடோல்ப் ஹெர்நக் (Adolph Hernack) என்பவர் ஞானஸ்நானம் என்பது எவ்வித சந்தேகமும் இல்லாமல் 'தண்ணீரில் மூழ்குவதே' என்று குறிப்பிடுகின்றார். புதிய ஏற்பாட்டிலும் வேறு எந்த கிறிஸ்தவ இலக்கியங்களிலும் இதைவிட மேலான ஆதாரங்கள் கூறப்படவில்லை.

<u>குறிப்பு :</u>

உலக இறையியல் நிபுணர்கள் ஒன்றுகூடி 'பாப்டிஸ்சோ' என்ற வார்த்தையின் கருத்து to dip – 'நீரில் மூழ்கு', Submerge – 'நீரில் அமிழ்த்து', Immerse – 'நீரில் மூழ்கடி' என்றே தீர்ப்பளித்துள்ளார்கள்.

## II. பலவிதமான ஞானஸ்நானமும் மற்றும் ஏன் அவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதும் :

அ. இன்று கிறிஸ்தவ சபைகளைச் சார்ந்தவர்கள் மூன்று வழிகளில் தண்ணீரை ஞானஸ்நானத்திற்கு பயன்படுத்துகிறார்கள். அவையாவன :

1. Immersion – என்பதற்கு மூழ்குதல், நீரில் அமிழ்ந்து, உள்ளே வைத்தல் என்பது கருத்தாகும்.
2. Affusion – என்பதற்கு ஒருவர் தலையில் தண்ணீரை ஊற்றுவது என்பதாகும்.
3. Aspersion – என்பதற்கு ஒருவர் தலையில் தண்ணீரைத் தெளித்தல் என்பதாகும்.

ஆ. இந்த மூன்று வார்த்தைகளுக்கான கிரேக்க பதம் :

1. Immersion – நீரில் அமிழ்ந்து–'பாப்டிஸ்மோ' (Baptismo)
2. Pouring - ஊற்று அல்லது கொட்டு – 'எக்சியோ' (Ekcheo) இந்த (Affusion) வார்த்தை ஞானஸ்நானத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் எங்கும் பயன்படுத்தப்படவில்லை.
3. Sprinkling – தெளிப்பு, தூவல் என்பதற்கு கிரேக்க வார்த்தை (Aspersion) 'ராண்டிசோ' (Rhantizo). இந்த வார்த்தை ஞானஸ்நானத்தைக் குறிப்பதற்காக புதிய ஏற்பாட்டில் எங்கும் பயன் படுத்தப்படவில்லை.

<u>குறிப்பு :</u>

புதிய ஏற்பாட்டில் தெளிப்பதும், ஊற்றுவதுமான இந்த இருமுறைகளும் ஞானஸ்நானத்தைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படவில்லை என தெளிவாகக் காண்கிறோம்.

இ. மூழ்குதலை பற்றியதான உரை :

1. புதிய ஏற்பாட்டில் எங்கெல்லாம் தண்ணீர் ஞானஸ்நானம் வழக்கத்தில் உள்ளதோ அங்கெல்லாம் 'பாப்டிஸ்சோ' (Baptizo) என்ற பதம் உறுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
2. உலக அளவிலான பாப்டிஸ்ட் அல்லாத இறையில் அறிஞர்கள் 'பாப்டிஸ்சோ' என்ற வார்த்தையின் அர்த்தம் மூழ்குதல் அல்லாமல் வேறு ஏதும் இல்லை எனவும், புதிய ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஞானஸ்நானம் மூழ்கி எடுப்பதாகவே இருந்தது எனவும் ஒத்துக்கொண்டுள்ளார்கள்.
3. ஞானஸ்நானமானது விசுவாசிகள் கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளுடன் ஒன்றித்துக் கொள்வதைக் காட்டுகிறபடியால் (ரோமர் 6:3–5; கொலோசெயர் 2:12–13) மூழ்குதலே ஞானஸ்நானத்திற்கு ஒரு பொருத்தமான முறையாகும். இந்த மூழ்குதலின் மூலமாக அவருக்குள் அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய மரணத்துக்குள்ளாக நாம் இணைந்துகொள்வதைக் காட்டுகிறது.
4. தர்க்க சாஸ்திர முறைமையின்படி வேதாகமச் சான்றுகள் :
   a. யோவான் 3:23–சாலீம் ஊருக்கு சமீபமான அயினோன் என்னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியால் யோவானும் அங்கே ஞானஸ்நானம் கொடுத்துவந்தான். (தெளிப்பு அல்லது ஊற்று ஞானஸ்நானமாக இருந்தால் அதற்கு அதிகமான தண்ணீர் தேவையில்லை).
   b. மாற்கு 1:9–இயேசுகிறிஸ்து ஞானஸ்நானம் பெறுவதற்காக நாசரேத்திலிருந்து 60 மைல் நடந்து சென்றார்.

c. அப்போஸ்தலர் 8:36–39–இந்த ஞானஸ்நானத்தில் பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீருக்குள் இறங்கினார்கள். வசனம் 39–அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினார்கள். இங்கு தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்தார்கள் என்பது தெளிவாக உள்ளது.

d. யோவான்ஸ்நானகன் யோர்தான் ஆற்றில் ஞானஸ்நானம் கொடுத்தார். தெளித்தல் அல்லது ஊற்றும் ஞானஸ்நானமாக இருந்தால் ஆறு தேவையில்லை. சிறிதளவு தண்ணீரே போதுமானது.

5. 'Didache' (டிட்டேக்) எனப்படும் பன்னிரண்டு அப்போஸ்தலரின் போதனை இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. (17ம் நூற்றாண்டில் மறுபடியுமாக கண்டுபிடிக்கப்பட்டது). நாம் வைத்திருக்கும் முக்கிய கிறிஸ்தவ மத குறிப்பீடுகள் திட்டவட்டமாக 'மூழ்குதல்' என்பதையே ஆதரிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் 'ஊற்றுதல்' அல்லது 'தெளித்தல்' என்பது அனுமதிக்கப்பட்ட காரியமாக காண்கிறோம்.

6. ஞானஸ்நானத்தின் கருத்தை வெளியிடுவதற்கு ஞானஸ்நானம் பண்ணப்படும் முறை முக்கியமானதாகும். 'மூழ்குதல்' மட்டுமே கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலோடு நாம் ஒன்றித்துக்கொள்வதைக் காட்டுகிறபடியால் அதுவே பொறுத்தமானது. ஆகவே இந்த முறையை மாற்றினால் அதன் கருத்தையே மாற்றுவது போலாகும். நம்முடைய வசதிகளுக்கு தக்கபடி அதின் முறையை மாற்றுவதற்கு யாருக்கும் எவ்வித அதிகாரமும் கிடையாது.

7. இங்கிலாந்து சபையைச் சேர்ந்த லைட்புட் (Lightfoot) என்ற அறிஞர் அவருடைய வியாக்கியானத்தில் (கொலோசெயர் 2:12–பக்கம் 182) ஞானஸ்நானம் என்பது பழைய மனிதனுடைய கல்லறையாகவும், புதிய மனிதனுடைய பிறப்பாகவும் இருக்கிறது என்று கூறுகிறார். ஒரு விசுவாசி ஞானஸ்நானத்தில் தண்ணீரின் கீழே போகும் பொழுது தான் பாவத்துக்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டதையும், எழுந்திருக்கும்போது புதிய நம்பிக்கையுள்ள வாழ்க்கைக்குள் வந்திருப்பதையும் அறிக்கையிடுகிறான். பாப்டிஸ்ட் அல்லாதவர்கள் கொண்டுள்ள கருத்தை வெளிப்படுத்தவே இதை இங்கே குறிப்பிடுகிறோம்.

8. எழுதப்பட்டுள்ள பழமையான புத்தகங்களில்கூட ஞானஸ்நானத்தில் 'மூழ்குதலே' இயற்கையான கருத்து என டாக்டர் எ.டி. ராபர்ட்சன் கூறுகிறார்.

9. மத்தேயு 3:11, மாற்கு 1:8 இவ்வசனங்களில் 'ஜலத்தினால்' என்று காண்கிறோம். அமெரிக்கன் ஸ்டாண்டர்டு ரிவிஷன் கமிட்டி 'ஜலத்தினால்' என்ற இந்த வார்த்தையை 'ஜலத்தில்' என்று மாற்றியுள்ளனர். இக்கமிட்டியில் பாப்டிஸ்டுசபை அங்கத்தினர்கள் யாரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ. தெளித்து அல்லது ஊற்றி ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமைக்கு எதிரான கருத்துக்கள் :

1. புதிய ஏற்பாட்டில் தெளித்தோ அல்லது ஊற்றியோ ஞானஸ்நானம் கொடுப்பது வழக்கத்தில் இல்லை.

2. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுவதற்கு ஊற்றுதல் சிறந்த அடையாளமாக இருக்கலாம். ஆனால் மனந்திரும்பி விசுவாசத்திற்குள் வந்தவுடனே பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுகின்றார் (எபேசியர் 1:13). நிச்சயமாக ஒருவர் ஞானஸ்நானம் எடுக்கும்போது பரிசுத்த ஆவியைப் பெறுவது இல்லை (ரோமர் 8:15,16; கலாத்தியர் 4:6,7).

3. தெளிப்பு ஞானஸ்நானம் 13–ம் நூற்றாண்டுவரை எங்கும் பழக்கத்தில் இல்லை. இந்த ஞானஸ்நானத்தை எடுத்தவர்கள் சபையாரால் அலட்சியப்படுத்தப் பட்டனர். டிரென்ட் (Trent) என்ற குழுவினர் 1545–1563–க்குள் மூன்றுமுறை கூடினர். அப்போது நடைபெற்ற பத்தொன்பதாவது பொதுவான கிறிஸ்தவ சபை கூட்டத்திற்குப் (19th Ecumenical Council) பின்பே தெளித்து அல்லது ஊற்றி ஞானஸ்நானம் கொடுக்குமுறை சபைகளால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

4. முன்பு கூறிய 'டிட்டேக்' (Didache) என்ற போதனையானது பிலிப் ஸ்காப் (Philip Schaff) என்ற பிரிஸ்பிட்டேரியன் (Presbyterian) சபையை சார்ந்தவரால் இப்படி மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "ஞானஸ் நானத்தை குறித்துப் போதித்த பிற்பாடு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய ஜீவத்தண்ணீரில் ஞானஸ்நானம் கொடு. ஜீவத்தண்ணீர் இல்லையானமால் சாதாரண தண்ணீரில் கொடு. குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க முடியவில்லையானால் வெதுவெதுப்பான தண்ணீரில் கொடு. இந்த இரண்டும் இல்லையென்றால் தண்ணீரை 3 முறை பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுப்பவர் தலையில் ஊற்று."

<u>குறிப்பு :</u>

a. மேற்கூறிய குறிப்புகள் 2–ம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை.

b. மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்முறை மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாக மட்டுமன்று, கட்டாயமாக எடு என்று துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

c. சில பிரத்தியேகமான சந்தர்ப்பங்களில் மாத்திரமே ஊற்றி ஞானஸ்நானம் கொடுக்கும் முறை அனுமதிக்கப் பட்டது. அதுவும் சில முக்கிய வழிமுறைகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டதாகவே இருந்தது.

5. 2–ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில கிறிஸ்தவர்கள் புதிய ஏற்பாட்டில் கூறியுள்ள சத்தியத்திற்கும், வழக்கத்திற்கும் மாறாக ஞானஸ்நானத்திற்குப் புதிய கருத்தைக் கொடுத்தார்கள். சிலர் ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபிறப்பு அடைகிறோம் என தவறான போதனையை கொண்டுவந்தார்கள். குழந்தை ஞானஸ்நானம், தெளிப்பு, ஊற்று ஞானஸ்நானம் கொடுத்து வேதசத்தியத்திற்கு முரண்பாடான பழக்கத்தைக் கொண்டுவந்தனர்.

## III. ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபடியும் பிறக்க முடியுமா? அல்லது ஞானஸ்நானம் ஒரு மனிதனை இரட்சிக்குமா?

நாம் மனதில் கொள்ளவேண்டிய ஒரு காரியம் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தைச் சார்ந்த 80 அல்லது 90 சதவிகித கிறிஸ்தவ சுவிசேஷ சபைகளும், ரோமன் கத்தோலிக்க சபைகளும் குழந்தை ஞானஸ்நானத்தை பயிற்சிப்பதோடுகூட ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபடியும் பிறக்க முடியும் என்ற தவறான போதனையை உடையவர்களாக இருக்கிறார்கள்.

அ. ஞானஸ்நானத்தினால் இரட்சிக்கப்படலாம் என்பது அதன் கருத்தையே அழிப்பதாகும். ஞானஸ்நானம் என்பது ஏற்கெனவே நமது இருதயத்திலும் வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றத்தை அறிக்கையிடுவதாகும் (அப்போஸ்தலர் 8:37).

ஆ. ஞானஸ்நானமானது தேவகிருபையை பெற்றுக்கொள்ள வழி வகுக்கும் காரியம் அல்ல. கிருபையினால் இரட்சிக்கப் பட்டவர்களே ஞானஸ்நானம் பெறவேண்டும். ஞானஸ்நானம் எடுப்பது ஒரு விசுவாசியின் சிலாக்கியமும், கடமையும் ஆகும்.

இ. சிலர் ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபடியும் பிறக்கமுடியும் என்பதற்கு முக்கியமாக இந்த வேதவசனத்தை குறிப்பிடுகின்றனர் (யோவான் 3:3–5).

1. யோவான் 3:3–5 : ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் . . . ஆண்டவர் இக்காரியத்தை நிக்கொதேமுவிடம் கூறும்போது கிறிஸ்தவ சபை ஸ்தாபிக்கப்படவில்லை. கிறிஸ்தவ ஞானஸ்நானமும் இல்லை. ஜலம் என்பது இங்கே ஞானஸ்நானத்தைக் குறிக்கவில்லை. அது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கிறது என்று கூறலாம் (1 பேதுரு 1:23). நமது மறுபிறப்பில் தேவசனம் இடம்பெற்றுள்ளது என்பது தெளிவாகிறது. வசனம் 4–ல் நிக்கொதேமுக்கு தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசிக்கக்கூடுமோ என்று கேட்கிறான். வசனம் 6–ல் இயேசுகிறிஸ்து மாம்சத்தினால் உள்ள பிறப்பையும், ஆவியினால் ஏற்படும் பிறப்பையும் குறிப்பிடுகின்றார்.
2. அப்போஸ்தலர் 2:38 : ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபிறப்பு பெறமுடியும் என்பவர்கள் இந்த வசனத்தை முக்கியப்படுத்துவார்கள். “மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.”

   a. இவ்வசனத்தில் ‘பாவமன்னிப்புக்கென்று . . .’ ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். மூலபாஷையில் இந்தக் கருத்து காணப்படவில்லை.

   b. இவ்வாக்கியமானது “நீங்கள் மனந்திரும்பி பாவம் மன்னிக்கப்பட்டதின் அஸ்திபாரத்தில் (On the basis of) ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்” என்று அமையவேண்டும்.

   மேலும் ஒரு வாக்கியத்தை வைத்துக் கொண்டு ஒரு போதனையை அமைக்கக்கூடாது. இவ்வாக்கியத்தின் படி பார்ப்போமானால், ஞானஸ்நானத்தினாலே பாவ மன்னிப்பு உண்டு என்று காண்கிறோம். இதில் மனிதனுடைய செயல் சேர்க்கப்படுகிறது. இது தேவனுடைய வசனத்தில் தெளிவாகக் காணப்படும் உபதேசத்திற்கு மாறாக காணப்படுகிறது. எபேசியர் 2:8,9; தீத்து 3:5,6; அப்போஸ்தலர் 10:43 இவ்வசனங்களை வாசித்து தியானிக்கவும்.
3. அப்போஸ்தலர் 22:16 “நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவம் போகக் கழுவப்படு.” இவ்வசனத்தில் ஞானஸ்நானத்தின் மூலமாகப் பாவம் கழுவப்படுவதுபோல் தோன்றுகிறது. இவ்வசனம் பவுல் தன் சாட்சியை எருசலேமில் சொல்லும் போது குறிப்பிடுவதாகும். பவுலின் அனுபவம் என்ன? கீழே குறிக்கப்பட்ட வசனங்களை வாசிக்கவும்.

   a. அப்போஸ்தலர் 9:6 – “தமஸ்கு சாலையிலேயே பவுல் கிறிஸ்துவை ஆண்டவரே என்று அழைத்து தன் வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுத்தான்.”

b. அப்போஸ்தலர் 9:11 – "அவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான்".

c. அப்போஸ்தலர் 9:15– "அவன் தெரிந்துகொண்ட பாத்திரமாக இருக்கிறான்".

d. அப்போஸ்தலர் 9:17– "அனனியா 'சகோதரனாகிய சவுலே' என்று அழைக்கிறான்."

e. அப்போஸ்தலர் 9:17– "நீ பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கு கர்த்தர் என்னை அனுப்பினார்".

f. அப்போஸ்தலர் 9:18– "பவுல் ஞானஸ்நானம் பெற்றார்".

**குறிப்பு :**

மேற்கண்ட வசனங்களிலிருந்து பவுல் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னதாகவே இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதாகக் காண்கிறோம்.

எப்பொழுதுமே கஷ்டமான வேதபகுதிகளை தெளிவான வேத பகுதிகளைக் கொண்டு விளக்குவது நல்லது.

(உ–ம்) அப்போஸ்தலர் 8:12, அவர்கள் விசுவாசித்தபோது ஞானஸ்நானம் பெற்றார்கள்.

அப்போஸ்தலர் 8:37, விசுவாசித்தால் ஞானஸ்நானம் பெறலாம்.

அப்போஸ்தலர் 2:21, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவன் எவனோ அவன் இரட்சிக்கப்படுவான்.

ரோமர் 10:13 – கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.

**குறிப்பு :**

ஒருவன் ஞானஸ்நானத்தினால் இரட்சிக்கப்படுகிறதில்லை என்று இங்கு தெளிவாகக் காண்கிறோம். கர்த்தருடைய நாமத்தின்மேல் விசுவாசம் வைத்து தொழுதுகொள்ளுகிறவனே இரட்சிக்கப்படுகிறான்.

**குறிப்பு :**

'கூப்பிடு' என்ற வார்த்தையின் வினைச் சொல்லின் அர்த்தத்தின் அடிப்படையில் அவரை கூப்பிடுகிற எவனும் பாவங்கள் போகக் கழுவப்படுகிறான் என்றே அப்.22:16 கூறுகிறது. ஞானஸ்நானம் என்பது இந்த அனுபவத்தைத் தொடாந்து செய்யப்படும் ஒரு அறிக்கையாகும். அதாவது எவ்விதமாக ஒரு விசுவாசி இயேசுகிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதல் இவைகளுடன் எப்படி தன்னை இணைத்துக் கொண்டுள்ளான் என்பதை அந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.

4. ஞானஸ்நானத்தின் மூலமாக மறுபிறப்பு அடையமுடியும் என்று கூறுபவர்கள் உபயோகிக்கும் மற்றொரு வேத பகுதி – 1 பேதுரு 3:19–21.

   a. ஞானஸ்நானம் பாவ அழுக்கை போக்க முடியாது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே ஒரு மனிதனின் பாவ அழுக்கைப்போக்கும். (வெளி.1:6; 1 யோவான் 1:7).

   b. கீழ்ப்படிந்தவர்களாகிய எட்டுபேரை தேவன் நோவாவின் பேழையின் மூலம் காப்பாற்றி, கீழ்படியாதவர்களை ஜலத்தினால் அழித்தார். அதேபோல ஞானஸ்நானம் என்பது கீழ்படிதல் ஆகும். அதாவது தேவனுக்கு முன்பாக தனது நல்மனசாட்சியை வெளிப்படுத்துதல் ஆகும் என்று பேதுரு கூறுகிறார்.

   c. நோவா பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டுபண்ணினான் (எபி.11:7). பேழைக்குள் இருந்த காரணத்தினால் நோவாவின் குடும்பத்தினர் 8 பேர் சரீரப்பிரகாரமாக இரட்சிக்கப்பட்டனர். நமது பேழையாகிய இரட்சகர் கிறிஸ்து இயேசுவே.

   d. அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானம் – நமக்குள்ளே ஏற்பட்ட விசுவாசத்தை வெளியரங்கமாக அறிக்கை செய்வதாகும்.

5. மாற்கு 16:16: விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.

   சட்டம் I : எந்த வேதவசனமும் வியாக்கியானப்படுத்தப்படும்பொழுது மற்ற சம்பந்தப்பட்ட எல்லா வேத வசனங்களோடும் ஒத்துப்போகிறதா என்பதை கவனிக்கவேண்டும்.

   சட்டம் II : எந்த கடினமான அல்லது வித்தியாசமான அர்த்தம் கொடுக்கக் கூடிய வேதபகுதி விளக்கப்படும் போது அது சம்பந்தப்பட்ட தெளிவான வேறோரு பகுதியைக்கொண்டே விளக்கவேண்டும் (மத்தேயு 28:19).

   சட்டம் III : சர்ச்சைக்குறிய வேதபகுதிகளை அஸ்திபாராமாக வைத்து போதனைகளை நிலைநாட்ட முயற்சிக்கக் கூடாது.

## IV. குழந்தை ஞானஸ்நானத்தைக் குறித்ததான கருத்து :

அ. ரோமன் கத்தோலிக்க சபைகளில் மட்டுமல்லாமல் பெரும்பாலான சுவிசேஷ புராட்டஸ்டன்ட் சபைகளிலும் குழந்தை ஞானஸ்நானத்தைக் கொடுத்து வருகிறார்கள்.

ஆ. குழந்தை ஞானஸ்நானத்தை பழக்கத்தில் கொண்டவர்கள் தங்களுக்கு சாதகமாக சொல்லக்கூடிய காரியங்கள்:

1. அப்போஸ்தலர் 2:38,39 "வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும்". இவ்வாக்கியத்தில் பிள்ளைகள் என்பதை பின் சந்ததி என்று எடுத்துக் கொள்ளாமல் குழந்தைகள் என்று எடுத்துக் கொள்ளுகிறார்கள்.
2. லீதியாள் என்னும் பேருள்ள ஸ்திரீ (அப்போஸ்தலர் 16:15) மற்றும் பிலிப்பிய சிறை அதிகாரி (அப்போஸ்தலர் 16:32–34) வீட்டில் உள்ள அனைவரும் ஞானஸ்நானம் பெற்றனர். இங்கு வீட்டில் உள்ள அனைவரும் என்பதில் குழந்தைகளும் அடங்கும் என்று கூறுகிறார்கள்.
3. விசுவாசிகளான பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் சபைக்குள் பிறந்த குழந்தைகளாக இருக்கிற படியினால் அவர்கள் கிருபையின் உடன்படிக்கைக்கு உட்பட்டவர்களென்றும் ஞானஸ்நானத்தின் முத்திரையைப் பெற உரிமையுள்ளவர்களென்றும் கூறுகிறார்கள்.
4. லூக்கா 1:15–ன் படி ஒரு தாயின் கர்ப்பத்தில் உள்ள குழந்தை பரிசுத்த ஆவியினால் நிரப்பபட்டிருக்கும் போது, மத்தேயு 19:14–ன்படி, அவர்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுடையவர்களாக இருக்கும்போது, விசுவாசிகளான பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகள் ஞானஸ்நானம் பெறு வதை தடைசெய்வதற்கு யாருக்கும் அதிகாரம் இல்லை என்று கூறுகிறார்கள்.

இ. குழந்தை ஞானஸ்நானத்திற்கு எதிராக உள்ள கருத்துக்கள் :

1. டிட்டேக் (Didache) என்கிற கிறிஸ்தவ குறிப்புகள் கூட குழந்தை ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.
2. பாப்டிஸ்ட் அல்லாத வேத அறிஞர்கள்கூட குழந்தைகள் ஞானஸ்நானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஜேகோபஸ் என்ற சபை ஸ்தாபகர் குழந்தை ஞானஸ்நானத்தை குறித்ததான அறிகுறியே புதிய ஏற்பாட்டில் இல்லை எனக் கூறுகிறார். பிரிஸ்பிட்டேரியன் (Presbyterian) சபையைச் சார்ந்த ஸ்காட் என்பவர் புதிய ஏற்பாட்டில் குழந்தை அல்லது சிறுவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக எந்தவித ஆதாரமும் இல்லை எனக் கூறியுள்ளார். இங்கிலாந்து சபையைச் சார்ந்த பிளம்மர் (Plummer) என்பவர் கிறிஸ்தவ ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு மனந்திரும்புதலும், விசுவாசமும் தேவை என்று கூறுகிறார்.
3. தெளிப்பு மற்றும் ஊற்று ஞானஸ்நானம் போல ஆதித்திருச்சபையில் வேதத்தில் காணப்படாத கருத்துக்களை ஞானஸ்நானத்திற்குக் கொடுத்த காரணத்தினால் குழந்தை ஞானஸ்நானமும் சபைக்குள் வந்துவிட்டது. ஞானஸ்நானத்தை கீழ்ப்படியவேண்டிய கட்டளையாக எடுத்துக்கொள்ளாமல், அதன்மூலமாக மறுஜனனம் ஏற்படுவதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதால் குழந்தைகள் கண்டிப்பாக ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டிய நிலை ஏற்பட்டது.
4. புதிய ஏற்பாட்டில் கூறியுள்ள ஞானஸ்நானத்திற்கு மனந்திரும்புதல் மிகவும் அவசியம் (அப்போஸ்தலர் 2:38, அப்போஸ்தலர் 17:30). மேலும் விசுவாசம் அவசியம் (அப்போஸ்தலர் 8:12,37,38; 16:31, மத்தேயு 28:19,20). இந்த இரண்டு காரியங்களை குழந்தைகள் செய்யமுடியாது. ஞானஸ்நானம் என்பது மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்படவேண்டும்.
5. குழந்தைகளும், நன்மை தீமை அறியாத சிறுபிள்ளைகளும் ஞானஸ்நானம் பெறாமலே இரட்சிப்படைகின்றனர் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. வாசிக்கவும் : மத்தேயு 18:3,4,10,14; 19:14; மாற்கு 10:14,15.
6. ஞானஸ்நானம் கொடுப்பதின் மூலமாக ஓர் குழந்தை மறுஜனனம் அடையும் என்ற போதனையானது முற்றிலும் வேதத்துக்குப் புறம்பானதும், சகல இடங்களிலும் உள்ள பாப்டிஸ்ட் சபை விசுவாசிகளால் புறக்கணிக் கப்பட்டதாகவும் உள்ளது.

## V. ஞானஸ்நானம் என்பது ஆண்டவர் கொடுத்த கட்டளையா அல்லது சபையினால் ஏற்பட்ட சடங்காச்சாரமா ?

அ. கட்டளை (Ordinance) என்பது திருச்சபை கைக்கொள்ளும்படியாகக் கொடுக்கப்பட்ட ஒன்று.

1. திருச்சபை கைக்கொள்ள ஆண்டவர் இரண்டுசட்டங்களைக் (Ordinance) கொடுத்துள்ளார்.
   a. கர்த்தரின் பந்தி–லூக்கா 22:19,20; 1 கொரிந்தியர் 11:23–26.
   b. தண்ணீர் ஞானஸ்நானம்–மத்தேயு 28:19,20.

2. தண்ணீர் ஞானஸ்நானம் என்பது கட்டளையாகவும், கீழ்ப்படியவேண்டிய ஒன்றாகவும் உள்ளது. ஆனால் அது மனிதனுக்கு இரட்சிப்பையோ, மீட்பையோ கொடுக்கக்கூடிய மதச்சடங்கு அல்ல (Sacrament).

ஆ. மதச்சடங்கு (Sacrament) என்பது மனிதனை இது இரட்சிக்கும் அல்லது மீட்டுக்கொள்ளளும் சக்தி உள்ளது என்று சபையினாலே உருவாக்கப்பட்ட ஓர் பழக்கம். அதாவது காணக்கூடிய இக்காரியத்தை செய்வதின் மூலமாக செய்கிற நபருக்கு ஆவிக்குரிய கிருபை அல்லது ஆசீர்வாதம் அருளப்படுகிறது என்று போதிப்பது. உதாரணமாக: கத்தோலிக்கர்கள் ஏழு மதச்சடங்குளை (Sacraments) வைத்துள்ளனர். ஞானஸ்நானம், திடப்படுத்தல், வந்தனை வழிபாடுகள், பிராயச்சித்தம் அல்லது நோன்பு அல்லது தவம், தைலம் பூசுதல் அல்லது அபிஷேகம், பரிசுத்த சட்டம் மற்றும் திருமணம். டிரென்ட் குழுவினர் (Trent) மேற்கூறிய ஏழு காரியங்களையும் கிறிஸ்து கூறியதாக அறிவித்துள்ளனர்.

## VI. உங்களது ஞானஸ்நானத்தைக் குறித்ததான முக்கியத்துவம் :

அ. நமது கர்த்தராகிய ஆண்டவரும், நமக்கு எல்லாக் காரியங்களிலும் மாதிரியாக உள்ள அவர் ஞானஸ்நானம் பெற்றார். அவரது கட்டளைப்படி நாமும் ஞானஸ்நானம் எடுக்கவேண்டும். இது தவிர்க்கமுடியாத முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஆ. இது இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிகிற ஒரு செயலாகும் (மத்தேயு 28:20).

இ. இது எல்லாருக்கும் முன்பாக, நீங்கள் உங்களுடைய எல்லா பாவத்திலிருந்தும் மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவை உங்களது சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்று அவர் மீது நீங்கள் வைத்துள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் அறிக்கையாகும்.

ஈ. இது இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுடன் உங்களை இணைத்துக் கொண்டதை அறிக்கையிடுதலாகும் (ரோமர் 6:3–5)

உ. உலக அற்புதங்களில் பெரிதான கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுடன் நீங்கள் இணைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை வெளிப்படுத்துகிறது (கொலோ. 2:12).

ஊ. இது உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றத்தை வெளிப்படுத்துகிறது. ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு அடக்கம் பண்ணப்பட்ட நீங்கள் இப்பொழுது புதிய வல்லமையுள்ள வாழ்க்கை வாழும்படியாக அவரோடுகூட எழுப்பப்பட்டுள்ளீர்கள் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை :**

கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட கட்டளை. ஆகையால் இது அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிற ஒரு செயலாகும். இது ஒரு மதச்சடங்கு அல்ல. இதன் மூலமாக நாம் நம்மை இரட்சிக்கவோ, மீட்டுக்கொள்ளவோ முடியாது. ஞானஸ்நானம் என்பது நம் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றத்தை வெளிப்டையாக எல்லோர் முன்னிலையிலும் அறிக்கை செய்வதாகும். வேதத்தில் சொல்லியுள்ளபடி கிறிஸ்துவோடு அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளில் நாம் இணைந்து கொண்டோம் என்பதற்கு அடையாளமாக தண்ணீரில் முழுவதுமாக மூழ்கி ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும். இந்த ஞானஸ்நானமானது தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவின் மேல் தங்கள் விசுவாசத்தை வைத்தவர்கள் மாத்திரமே எடுக்கவேண்டிய ஒன்றாகும். இந்த ஞானஸ்நானம் யாரால் கொடுக்கப்படவேண்டும் என்பது வரையறுக்கப்பட வில்லையானாலும் பொதுவாக ஒரு ஸ்தலசபையின் போதகராலே செய்யப்படுவதாக உள்ளது.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கு முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# ஞானஸ்நானம்

ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி

இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. ஒரு விசுவாசிக்கு ஞானஸ்நானம் மிகவும் முக்கியம், காரணம் :
   a. தேவன் கட்டளையிட்டிருக்கிறார்
   b. இரட்சிப்புக்கு இது அவசியமானது
   c. கிறிஸ்துவுக்காக வாழ விசுவாசிக்கு உதவுகிறது
2. ‘ஞானஸ்நானம்’ என்கிற வார்த்தையின் பொருள் என்ன ?
   a. கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளுதல்
   b. தண்ணீருக்குள் மூழ்கடி
   c. பரிசுத்தமாக மாறுவது
3. இன்றைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படும் **மூன்று** முறைகளை வட்டமிடுக.
   a. தண்ணீருக்குள் ஒரு நபரை முழுக்குதல்
   b. சிறப்பான ஒரு கப் தண்ணீரைக் குடித்தல்
   c. ஒருவரின் தலைமீது தண்ணீரை ஊற்றுதல்
   d. குழந்தையின் தலைமீது தண்ணீரைத் தெளித்தல்
   e. சிறப்பான தண்ணீரைக் கொண்டு ஒரு நபரைக் கழுவுதல்
4. முழுக்கு ஞானஸ்நானம் எதற்கு அடையாளமாக இருக்கிறது ?
   a. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுதல்
   b. கிறிஸ்துவின் மீது நமது பாவம் வைக்கப்படுதல்
   c. கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் இவற்றுடன் விசுவாசி இணைக்கப்படுதல்
5. ஞானஸ்நானத்திற்கு அதிகத் தண்ணீர் பயன்படுத்தியதைக் காண்பிக்கும் வேதாகம உதாரணம் எது ?
   a. யோவான் 3:23  b. கொலோசெயர் 2:12,13  c. ரோமர் 6:3–5
6. தண்ணீரை ஊற்றுதல், தெளித்தல், ஆகிய முறைகள் ஆரம்பிக்கப்பட்டது எப்பொழுது ?
   a. 13–ம் நூற்றாண்டு
   b. 5–ம் நூற்றாண்டு
   c. 15–ம் நூற்றாண்டு
7. தெளிப்பு ஞானஸ்நானத்தை அங்கீகரித்த சபைக் குழு எது ?
   a. கார்த்தேஜ் (carthage) சபைக்குழு
   b. ரோம சபைக்குழு
   c. டிரென்ட் (Trent) சபைக்குழு

8. ஞானஸ்நானம் ஒரு மனிதனை இரட்சிக்குமா ?

a. ஒரு மனிதனை இரட்சிக்கிறது

b. ஒரு மனிதனை இரட்சிப்பதில்லை

9. அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்பட்டது எப்பொழுது ?

a. அவர் ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன்பு

b. அவர் ஞானஸ்நானம் எடுத்தபொழுது

c. அவர் ஞானஸ்நானம் எடுத்த பிற்பாடு

10. குழந்தை ஞானஸ்நானத்தை வலியுறுத்தும் மக்கள் பயன்படுத்தும் வசனம் எது ?

a. அப்போஸ்தலர் 8:38,39

b. அப்போஸ்தலர் 2:38,39

c. மாற்கு 16:16

11. புதிய ஏற்பாட்டின்படி ஞானஸ்நானம் எடுப்பதற்கான தகுதி என்ன ?

a. ஒரு நல்ல வாழ்க்கை

b. பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்

c. மனந்திரும்பி கிறிஸ்துவில் விசுவாசம் வைக்க வேண்டும்

12. கட்டளை (நியமம்) என்பது என்ன ?

a. இரட்சிக்கப்படுவதற்கு இது அவசியம் என்று சபையால் சொல்லப்பட்டு, நடைமுறையில் உள்ள செயலாகும்

b. தேவனால் கட்டளையிடப்பட்ட சபையின் நடைமுறைச் செயலாகும்

c. ஒரு நபரை சிறந்த கிறிஸ்தவராக மாற்றும் காரணத்தால், சபையால் இது அங்கீகரிக்கப்பட்டுள்ளது

13. சபைக்கு ஆண்டவர் கொடுத்திருக்கும் கட்டளை எத்தனை ?

a. 3 b. 2 c. 7

14. மதச் சடங்கு (சாக்ரமண்ட்) என்றால் என்ன ?

a. இரட்சிப்புக்காக சபைகள் ஏற்படுத்தியிருக்கும் சடங்குகள்

b. தேவனால் கட்டளையிடப்பட்ட காரணத்தினால் கைக் கொள்ளப்படுவது

c. ஒரு நபரை சிறந்த கிறிஸ்தவனாக மாற்றுவதற்கு சபையே ஏற்படுத்திக் கொண்ட சடங்குகள்

15. யார் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் ?

a. போதகர் (சபை)

b. சபையோடு நல்ல உறவில் உள்ள ஏதேனும் ஒரு அங்கத்தினர்

c. தலைவர்கள் (சபை)

16. புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தாத **இரண்டு** ஞானஸ்நான முறைகள் எது ?

a. ---------------------------------------------------------------------------------

b. ---------------------------------------------------------------------------------

17. முழுக்கு ஞானஸ்நானம் மிகவும் அவசியம் ஏன் **?** இதற்கான **மூன்று** காரணங்களைக் குறிக்கவும்.

a. கிறிஸ்து தாமே நமக்கு மாதிரி

b. கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் செயலாகும்

c. இது பொது சாட்சியாகும்

d. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டதை அறிக்கை செய்வதாகும்

e. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடையாளமாகும்

f. உங்களது வாழ்க்கை மாறியிருப்பதை இது காண்பிக்கிறது

18. ஞானஸ்நானத்தினால் இரட்சிப்பு என்பதை நம்பும் மக்கள் பயன்படுத்தும் **இரண்டு** வேத பகுதிகளைக் குறிக்கவும்.

a. ------------------------------------------------------------------------------------

b. ------------------------------------------------------------------------------------

19. இரட்சிக்கப்பட்ட பின்பு தான் ஞானஸ்நானம் பெற வேண்டும் என்பதை குறிக்கும் **இரண்டு** வேத பகுதிகளைக் குறிக்கவும்.

a. ------------------------------------------------------------------------------------

b. ------------------------------------------------------------------------------------

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________